දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார உ அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. ) **CF/EXD/07/2022**

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2022.07.28
Date )

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02-68/2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய நிறுவனத் தலைவர்களிற்கும்

## தாதிச் சேவையில் தரம் II இனைச் சேர்ந்த உத்தியோகத்தாகளுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2021

1837/8 ஆம் இலக்கமுடைய 2013.11.19 ம் திகதிய அதி விஷேட பொதுச் சுற்று நிருபத்தில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய தாதி உத்தியோகத்தர்கள் தரம் II ற்கு நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைவதற்குள் சித்தியடையவேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

02 **தகைமைகள்**

- தரம் II ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அல்லது பதவி உயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.
- பழைய தாதிய யாப்பின் பிரகாரம் 2010.11.01 ஆம் திகதியுடன் II (அ) வகுப்பில் 6 வருட முனைப்பான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள தாதிய உத்தியோகத்தர்கள் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்
- 2010.11.01 ம் திகதி முதல் 2020.12.31 ஆம் திகதி வரையிலான இடைக்காலத்திற்குள் முதலாவது நியமனத் திகதியில் இருந்து 05 வருட முனைப்பான சேவைக்காலத்தினை பூர்த்திசெய்துள்ள மற்றும் பழைய தாதிய யாப்பின் பிரகாரம் II (அ) வகுப்பிற்கு உயர்வு பெறுவதற்கு அவசியமான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள தாதிய உத்தியோகத்தர்களாயின் அவர்கள் தரம் II ற்கு உயர்வு பெற்றதும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையை பெறுவர். அவர்களது தர உயர்வு வழங்கிய நியமன கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 03 வருடத்திற்குள் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சையில் சித்தியடைவதற்கு சலுகைக் காலம் வழங்கப்படும்.
- 2021.01.01 ஆம் திகதியின் பின்னர் தரம் II ற்கு உயர்வு பெறும் உத்தியோகத்தர்கள் தரம் II ற்கு உயர்வு பெற்ற தினத்திலிருந்து 03 வருட காலத்திற்குள் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையினை சித்தியடைவது கட்டாயமாகும்.

**(குறிப்பு: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினமான 2022.09.23 ஆம் திகதியுடன் தரம் II யிற்கு நியமனம் செய்யப்பட்டு கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும்)**

03 **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பணிப்பாளர் (பரீட்சைகள்) அவர்களிற்கு **202209.23** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையென நிறுவனத் தலைவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது விண்ணப்பப் படிவத்துடன் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய கடித உறை இரண்டு அனுப்பப்படல் வேண்டும். (இக் கடிதவுறையில் விரும்பியவாறு அலுவலக முகவரியை அல்லது தனிப்பட்ட முகவரியினை எழுதியனுப்பலாம்) தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்களும், தவறான விண்ணப்பங்களும், முழுமையாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் எது வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

04 **பரீட்சைக் கட்டணம்**

(i) பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

(ii) இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றுதலோ, மீள வழங்கப்படுதலோ மேற்கொள்ளப்பட மாட்டாது.

05 **பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

(ii) ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு அல்லது அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06 **பரீட்சைத்திட்டம்**

இவ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது தாதிச் சேவைக் கோட்பாடு தொடர்பான அறிவு, நோயாளர் விடுதி முகாமைத்துவம் என்னும் கட்டுரை வடிவிலான இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. நேரம் 03 மணித்தியாலங்கள் ஒவ்வொரு வினாத்தாளின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் 40 புள்ளிகளினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றும் முதற்தடவையிலேயே உரிய விடயங்கள் அவைத்திற்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

**(தாதி உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் அதாவது தாதி மாணவ/மாணவியாக பயிற்சி பெறுவதன் பொருட்டு விண்ணப்பித்த மொழியில் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.)**

07 **பரீட்சைப் பாடத்திட்டம்**

**வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

(i) தாதிச் சேவைக் கோட்பாடு தொடர்பான அறிவு வினாத்தாள்
சத்திர சிகிச்சை தாதிச்சேவை
மருத்துவ தாதிச் சேவை
சிறுவர் தாதிச்சேவை

(ii) நோயாளர் விடுதி முகாமைத்துவம் அறிவு வினாத்தாள்
நோயாளர் பராமரிப்பு, முகாமைத்துவம்
பஞ்சகர்ம எண்ணக்கரு
செயற்பாட்டுத்திட்டம் - மாதாந்த / வருடாந்த

எல்லா வினாத்தாளும் கட்டுரை வினாக்கள் 08 ஐக் கொண்டுள்ளது. அதில் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

08 **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தினை உங்களது வைத்தியசாலையில் நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும்.

**குறிப்பு : இவ்வறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.**

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிச் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக,

- பிரதிப் பணிப்பாளர் பயிற்சி மற்றம் ஆராய்ச்சி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் நிர்வாகம் - 01 - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் நிர்வாகம் - 02 - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் கல்வி மற்றும் பயிற்சி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் வைத்திய சேவை - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் நிர்வாகம் - V - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- படைத்தளபதி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- ஆயுர்வேத ஆணையாளர் - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- அனைத்து தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்களும் - அவசிய நடவடிக்கையின் பொருட்டு

**EXD**

அலுவலக பாவனையின் பொருட

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதிச் சேவையில் தரம் II இனைச் சேர்ந்த உத்தியோகத்தாகளுக்கான**
**வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2021**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) : ...............................................
...............................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் )

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்:.......................................................................
.............................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயா ( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

(ஆ) (i) II ம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட / உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதியும்: ..............
கடித இலக்கமும் ..........................

(ii) 2010.11.01 ம் திகதி தரம் II ல் தொடர்ச்சியான சேவைக்காலம் : ........................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ...............................................................

(iv) தொலைபேசி இலக்கம் :

(v) தேசிய அடையாள அட்டை இல :

(vi) மின்னஞ்சல் முகவரி : .........................................................................................

**02.** 02தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தினை இடுக. தோற்றவில்லையாயின் (✗) அடையாளமிடுக.

தாதிச் சேவைக் கோட்பாடு தொடர்பான அறிவு ☐ நோயாளர் விடுதி முகாமைத்துவம் ☐

**03.** (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் (தமிழில்) ..............................................................
(ஆங்கிலத்தில்) ........................................................................

(ஆ) இந்நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐
மாகாண சபையினால் ☐

(இ) மாகாண சபையாயின் அதனைக் குறிப்பிடவும்.....................................................................

(ஈ) அதற்குரிய மாவட்டம் ☐

**(இம் மாவட்டத்தில் பரீட்சை நிலையம் அமையப் பெறாதவிடத்து அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவீாகள்)**

(உ) பரீட்சை அனுமதி அட்டை, அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9"x4" அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை **இரண்டு** இணைக்கப்பட்டு உள்ளதா? ...............................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) .....................................................................................
.............................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ................................................

**04.** பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..............................................

**(தாதி உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் அதாவது தாதி மாணவ/மாணவியாக பயிற்சி பெறுவன் பொருட்டு விண்ணப்பித்த மொழியில் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.**

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ........................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ...............

| முத்திரைக் கூண்டு |
|---|

**06. விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

சுகாதார போஷணை மற்றம் சுதேச வைத்திய அமைச்சின் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................................

............................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

**07. விஷேட தர தாதி உத்தியோகத்தரின் சிபாரிசு**

திரு / திருமதி / செல்வி ............................................................................................ தரம் II தாதி உத்தியோகத்தராக எனது பிரிவில் கடமை புரிகின்றாரென உறுதிப்படுத்துகிறேன்.

............................................ ............................................

திகதி விஷேட தர தாதி உத்தியோகத்தரின் கையொப்பம்

---

**08. சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் II வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................ ............................................

பெயர் கையொப்பமும், திகதியும்.

---

**09. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ............................................................................................

என்பவர் ................................................................................ ஆக இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறைஎன்பதால் / முதன் முறையல்ல என்பதால் ரூபா ................. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகமைகளை இவர் கொண்டுள்ளார் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................... ............................................

திகதி

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

---

**10. பனமுகப்படுத்தப்பட்ட / விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ........................................................ என்பவர் ...................................

உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ...........................

............................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /

விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.)

தேவையற்றவற்றினைக் கீறிவிடவும்.